# 23

### சபை:

# இதன் இசை (1)

## புதிய உடன்படிக்கை

1. **"கிறிஸ்தவர்" என்ற சொற்றொடர் எந்த உடன்படிக்கைக்கு உரியது (அப். 11:26; 2 கொரி. 3:8)?**
2. **சபையானது எந்த உடன்படிக்கைக்கு உரியதாக உள்ளது (மத். 16:18; அப். 20:28)?**
3. **புதிய ஏற்பாடு/உடன்படிக்கை எப்பொழுது செயல்படத் தக்கதாகப்பட்டது (எபி. 9:16, 17)?**
4. **ரோமர்கள் நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவர்களாயிருந்தது எவ்வாறு (ரோமர் 7:4)?**
5. **கிறிஸ்தவர்கள் கர்த்தரை எவ்வாறு சேவிக்கின்றனர்? ஏன் (ரோமர் 7:6)?**
6. **நியாயப்பிரமாணத்திற்குத் திரும்புதலின் சீரற்ற தன்மையைப் பற்றிக் கலந்துரையாடவும் (ரோமர் 7:2, 3)?**
   அ. *நியாயப்பிரமாணத்திற்குத் திரும்புவதில் அடங்கியுள்ள கடமை என்ன (கலா. 5:3)?*
   ஆ. *அப்படிப்பட்ட ஒரு செயல்பாட்டின் பயங்கரமான விளைவு என்னவாயிருக்கும் (கலா. 5:4)?*

## புதிய ஏற்பாட்டின் இசை

1. **பின்வரும் வசனப் பகுதிகளைக் கவனமாய் வாசிக்கவும்:**
   அ. *"அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பின்பு, ஒலிவ மலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்" (மத். 26:30; மாற். 14:26).*
   ஆ. *"நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்" (அப். 16:25).*
   இ. *"இதனிமித்தம் நான் புறஜாதிகளுக்குள்ளே உம்மை அறிக்கை பண்ணி, உம்முடைய நாமத்தைச் சொல்லி, சங்கீதம் பாடுவேன்" (ரோமர் 15:9).*
   ஈ. *"இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்" (1 கொரி. 14:15).*
   உ. *"சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்*

*பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி" (எபே. 5:19).*

ஊ. *"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாய் வாசமாயிப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி'' (கொலோ. 3:16).*

எ. *"உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன்" (எபி. 2:12).*

ஏ. *"ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்" (எபி. 13:15).*

ஐ. *''உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக் கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக் கடவன்" (யாக். 5:13).*

## மேற்கோள்களின் மீது வினாக்கள்

1. ***இசையில் எத்தனை வகைகள் உள்ளன?***
   *இசைக் கருவிகளால் இசைக்கப்படுதல் மற்றும் வாய்ப்பாட்டு.*
2. ***இங்கு தரப்பட்டுள்ள ஒவ்வொரு மேற்கோளிலும் எவ்வகையான இசை குறிப்பிடப்பட்டுள்ளது?***
3. ***தேவனைத் துதிக்க இயேசுவும் சீஷர்களும் எவ்விதத்தில் இசையைப் பயன்படுத்தினர்?***
4. ***பவுல் மற்றும் சீலா என்ற பிரசங்கியார்கள் தங்கள் உணர்வுகளுக்கு எவ்வகையான வெளிப்பாட்டைக் கொடுத்தனர்?***
5. ***எபேசியர்களையும் கொலோசெயர்களையும் என்ன செய்யும்படி பவுல் கேட்டுக் கொண்டார்?***
6. ***சங்கீதங்கள், கீர்த்தனைகள் மற்றும் ஞானப்பாட்டுக்கள் ஆகியவற்றுடன் என்ன செய்யப்பட வேண்டியிருந்தது?***
7. ***சீஷர்களின் ஊழியத்தில் இயேசு செய்திருந்த வரைமுறை என்ன (மத். 28:20)?***
8. ***கிறிஸ்துவின் உபதேசத்திற்கு அப்பால் ஒருவர் சென்றால் என்ன நடக்கும் (2 யோவா. 9)?***
9. ***ஒருவர் புதிய ஏற்பாட்டுடன் ஒன்றைக் கூட்டினாலோ அல்லது அதிலிருந்து ஒன்றை எடுத்துப் போட்டாலோ, அவருக்கு என்ன நேரிடும் (வெளி. 22:18, 19)?***
10. ***கிறிஸ்துவின் போதனைக்கு அப்பால் செல்வதற்கு/சென்றால் கொடுக்க வேண்டிய விலை என்ன (2 யோவா. 9)?***
    அ. *உபதேசத்தில் நிலைத்திருந்தால், கிடைக்கும் ஆசீர்வாதம் என்ன (2 யோவா. 9)?*

*ஆ. வேதாகமத்திலிருந்து ஒன்றை நீக்கிப் போடும் அல்லது அதனுடன் ஒன்றைக் கூட்டும் மனிதருக்கு என்ன நடக்கும் (வெளி. 22:18, 19)?*

***11. தேவன் எந்த வகையான இசையைக் கட்டளையிட்டார் (எபே. 5:19; கொலோ. 3:16)?***

***12. கர்த்தருக்கு அந்நிய அக்கினியைச் செலுத்தியது யார் (லேவி. 10:1அ)?***

*அ. அந்நிய அக்கினி என்பது எதுவாயிருந்தது (லேவி. 10:1இ)?*

*ஆ. இந்த முன் அனுமானத்திற்குக் கிடைத்த தண்டனை என்ன (லேவி. 10:2)?*

***13. ஒவ்வொரு கிறிஸ்தவரும் தம் ஆராதனையில் எவ்வாறு வழிநடத்தப்பட வேண்டியவராயிருக்கின்றார் (2 கொரி. 5:7)?***

***14. தேவனுடைய ஆராதனையில் ஒருவர் விசுவாசத்தின்படி வழி நடத்தப்படாதிருந்தால் என்ன நடக்கும் (ரோமர் 14:23)?***

***15. பிலிப்பியர்கள் என்ன செய்ய வேண்டியவர்களாய் இருந்தனர் (பிலி. 4:9)?***

*அ. பவுலின் பாடுதல் பற்றிய விபரம் எங்குள்ளது (அப். 16:25; 1 கொரி. 14:15)?*

*ஆ. பவுல் எவ்விடத்திலாவது இசைக் கருவியை இசைத்தோ அல்லது அதைக் கட்டளையிட்டோ உள்ளாரா?*